**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 163 of 2025**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : சரஸ்வதி** | **Father/Husband's Name : சுந்தர்ராஜன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.07.2026.**

**A1 to A4 present.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தாளையம் நாகூர் பிரிவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 09.04.2025ம் தேதி காலை 7.00 மணிக்கு நான் எனது மகன் லிங்குசாமி வீட்டின் முன்பு இருந்தபோது கூட்டமாக இருந்தது. அப்போது அங்கு சண்டையிட்டு கொண்டிருந்தவர்களை தடுக்க சென்றபோது நானும், எனது மகள் மகாலட்சுமியும் சண்டையிட்டு கொண்டிருந்தவர்களை தடுத்தபோது கீழே விழுந்துவிட்டோம். அதில் எங்களுக்கு காயமானது. பின்னர் பழனி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 09.04.2025ம் தேதி காலை 7.00 மணிக்கு நான் எனது மகன் லிங்குசாமி வீட்டின் முன்பு ஆஜர் எதிரிகள் அசிங்கமாக எனது மருமகளை திட்டி கொண்டிருந்தார்கள் எனவும், நான் என்னவென்று கேட்க சென்றபோது எனது பேத்தியை அடித்தும் நான் தடுக்க சென்றபோது என்னையும், எனது மகளையும் செருப்பால் அடித்தார்கள் எனவும், அதில் எனது மகளுக்கும், எனது பேத்திக்கும் காயமானதால் பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம்

எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **சமாதான மனு அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** சமாதான மனுவில் எதிரிகள் மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

3. இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.23 18:11:46 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 163 of 2025**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : மகாலட்சுமி** | **Father/Husband's Name : தர்மேஸ்வரன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.07.2026.**

**A1 to A4 present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தாளையம் நாகூர் பிரிவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. கடந்த 09.04.2025ம் தேதி காலை 7.00 மணிக்கு நான் எனது மகன் லிங்குசாமி வீட்டின் முன்பு இருந்தபோது கூட்டமாக இருந்தது. அப்போது அங்கு சண்டையிட்டு கொண்டிருந்தவர்களை தடுக்க சென்றபோது நானும், அ.சா.1ம், எனது மகள் கன்னிகாவும் சண்டையிட்டு கொண்டிருந்தவர்களை தடுத்தபோது கீழே விழுந்துவிட்டோம். அதில் எங்களுக்கு காயமானது. பின்னர் பழனி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 09.04.2025ம் தேதி காலை 7.00 மணிக்கு நான் எனது மகன் லிங்குசாமி வீட்டின் முன்பு ஆஜர் எதிரிகள் அசிங்கமாக எனது மருமகளை திட்டி கொண்டிருந்தார்கள் எனவும், நான் என்னவென்று கேட்க சென்றபோது எனது பேத்தியை அடித்தும் நான் தடுக்க சென்றபோது என்னையும், எனது மகளையும் செருப்பால் அடித்தார்கள் எனவும், அதில் எனது மகளுக்கும், எனது பேத்திக்கும் காயமானதால் பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம் எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு

ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சமாதான மனுவில் எதிரிகள் மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

3. இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.23 18:11:51 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 163 of 2025**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : மாலதி** | **Father/Husband's Name : லிங்குசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.07.2026.**

**A1 to A4 present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தாளையம் நாகூர் பிரிவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார். அ.சா.2 எனது நார்த்தனார். கடந்த 09.04.2025ம் தேதி காலை 7.00 மணிக்கு அ.சா.1 அவரது மகன் லிங்குசாமி வீட்டின் முன்பு இருந்தபோது கூட்டமாக இருந்தது. அப்போது அங்கு சண்டையிட்டு கொண்டிருந்தவர்களை தடுக்க சென்றபோது அ.சா.2ம், அ.சா.1ம், மற்றும் கன்னிகாவும் சண்டையிட்டு கொண்டிருந்தவர்களை தடுத்தபோது கீழே விழுந்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 09.04.2025ம் தேதி காலை 7.00 மணிக்கு அ.சா.1 அவரது மகன் லிங்குசாமி வீட்டின் முன்பு ஆஜர் எதிரிகள் அசிங்கமாக அ.சா.1–ன் மருமகளை திட்டி கொண்டிருந்தார்கள் எனவும், அ.சா.1, அ.சா.2 என்னவென்று கேட்க சென்றபோது கன்னிகா என்பவரையும் அடித்தும் அ.சா.1 தடுக்க சென்றபோது அ.சா.1ஐயும், அ.சா.2–ஐயும் செருப்பால் அடித்தார்கள் எனவும், அதில் அ.சா.1, அ.சா.2 மற்றும் பட்டியல் சாட்சி 3க்கும் காயமானது எனவும், பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம் எனவும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

3. இல்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.23 18:11:58 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 163 of 2025**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : பேச்சியம்மாள்** | **Father/Husband's Name : குமார்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.07.2026.**
**A1 to A4 present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தாளையம் நாகூர் பிரிவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். எனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 09.04.2025ம் தேதி காலை 7.00 மணிக்கு அ.சா.1 அவரது மகன் லிங்குசாமி வீட்டின் முன்பு ஆஜர் எதிரிகள் அசிங்கமாக அ.சா.1–ன் மருமகளை திட்டி கொண்டிருந்தார்கள் எனவும், அ.சா.1, அ.சா.2 என்னவென்று கேட்க சென்றபோது கன்னிகா என்பவரையும் அடித்தும் அ.சா.1 தடுக்க சென்றபோது அ.சா.1ஐயும், அ.சா.2–ஐயும் செருப்பால் அடித்தார்கள் எனவும், அதில் அ.சா.1, அ.சா.2 மற்றும் பட்டியல் சாட்சி 3க்கும் காயமானது எனவும், பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம் எனவும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

3. இல்லை.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.23 18:12:04 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 163 of 2025**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : முருகன்** | **Father/Husband's Name : பழனிச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.07.2026.**

**A1 to A4 present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தாளையம் நாகூர் பிரிவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 10.04.2025ம் தேதி காலை சுமார் 8.30 மணியளவில் நானும், தங்கவேல் என்பவரும் மாலதி என்பவரது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், தங்கவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

2. போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.23 18:12:09 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.